**தேதி :** 11.09.2025 **SC.No. :** 60/2024 PW :1 வெள்ளத்துரை

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரியை இந்த சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியை எப்போது மாடு முட்டி கீழே விழுந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகன் சாதாரணமாக இரவு 09.00–09.30 க்குள் கடையை அடைத்து விட்டு வந்து விடுவார். என்னுடைய வீட்டை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் இல்லை. முன்னால் மட்டும் உள்ளது. அந்த காம்பவுண்ட் சுவரில் கேட் உள்ளது. அந்த காம்பவுண்ட் சுவரில் சம்பவம் நடந்த தேதியில் லைட் இல்லை. காம்பவுண்ட் சுவருக்கு வெளியே இருட்டாக இருக்கும் என்றால் சரியல்ல. எலக்ட்ரிக் போல் லைட் இருக்கும். எதிரி காம்பவுண்ட் சுவருக்கு வெளியே நின்று சத்தம் போட்டார்.

வாக்குவாதம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 10 நிமிடம் நடந்தது. அந்த தெருவில் உள்ள நபர்கள் கூட்டமாக கூடினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நானும், என்னுடைய மனைவியையும், மகனையும் தவிர வேறு யாரும் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகனை நான் மட்டும் தான் ஊத்துமலை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். ஊத்துமலை மருத்துவமனைக்கு இரவு சுமார் 10.00, 10.15 மணிக்கு சென்றிருப்பேன். நான் காவல்நிலையத்தை தாண்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஊத்துமலை காவல்நிலையத்தில் தகவல் சொல்லிவிட்டு சென்றேன் என்றால் சரிதான்.

போலீசார் கம்ப்ளைண்ட் வாங்கினார்களா? என்றால் முதலில் மருத்துவமனைக்கு செல்லுங்கள், அங்கு வந்து கம்ப்ளைண்ட் பெற்று கொள்வதாக கூறினார்கள். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தேன். ஊத்துமலை அரசு மருத்துவமனையில் 5, 10 நிமிடங்கள் இருந்திருப்பேன். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட என்னுடைய மகனுடன், நானும், என் மனைவியும் ஆம்புலன்சில் சென்றோம். வேறு யாரும் வரவில்லை என்றால் சரிதான். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் எத்தனை மணி நேரம் இருந்தோம் என்றால் கழுத்தின் உள்ளேயும், வெளியேயும் தையல் போட்டார்கள், அரை மணி நேரமானது. புகாரை வாக்குமூலமாக கொடுத்தேனா? மனுவாக கொடுத்தேனா? என்றால் மனுவாக கொடுத்தேன்.

புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் வேறு ஒரு நபர் எழுதித் தந்தார். அவர் யாரென்று எனக்கு தெரியாது. புகார் மனு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து எழுதப்பட்டது. எனக்கு எழுதப் படிக்க தெரியாது. புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் வாசித்து காண்பித்து நான் புரிந்து கொண்டேன். எழுதிய ஆள் எனக்கு வாசித்து காண்பித்தார். ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சங்கரன்கோவில் மருத்துவமனையில் வைத்தும், ஊத்துமலை காவல்நிலையத்தில் வைத்தும் விசாரித்தார்கள், தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி சுடுகாடு பக்கம் வைத்து என்னை திட்டவில்லை என்றாலும், எங்கள் வீட்டிற்கு வந்து எனது மகனை வெட்டவும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு பல்வேறு தவறான நடவடிக்கைகள் இருந்தது என்றாலும்,

அதில் பாதிக்கப்பட்ட நபர் எனது மகனை வெட்டி காயப்படுத்தினார் என்றாலும், மேற்படி விபரத்தை வெளியே சொன்னால் அவமானமாகி விடும் என்று, பின்யோசனையிட்டு எதிரியின் மீது பொய்யாக புகார் மனு கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவநாளில் எதிரி ஊரில் இல்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:41:13 +0530

**தேதி :** 11.09.2025 **SC.No. :** 60/2024 PW :2 மகேந்திரன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரியை இந்த சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியுமா? என்றால் அவர் உள்ளூர்காரர் என்ற முறையில் எனக்கு தெரியும். அவர் கேரளாவில் வேலை பார்த்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்பு ஏற்கனவே எதிரிக்கும், எங்கள் குடும்பத்திற்கும் முன் பகை எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் மருத்துவமனைக்கு என்னுடைய அப்பா என்னை அழைத்து சென்றார். ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ஊத்துமலை காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் ஊத்துமலை காவல்நிலையத்திற்கு மருத்துவமனைக்கு செல்லும்போது சென்றோமா? என்றால் நான் மயக்கமாக இருந்தேன். என்னுடைய அப்பாவை கட்டி பிடித்து கொண்டு இருசக்கரவாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன்.

சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 09.00–10.00 மணிக்குள் நடந்தது. சம்பவம் நடக்கும் போது, அருகிலுள்ளவர்கள் பார்த்தார்களா? என்றால் அப்பாவும், அம்மாவும் மட்டும் நேரில் பார்த்தார்கள். வேறு யாரும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஊத்துமலை அரசு மருத்துவமனையிலிருந்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு செல்லும்போது என்னுடன் அப்பா, அம்மாவும், வேறொரு நர்சும் ஆம்புலன்சில் வந்தார்கள். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் போலீசார் வந்தார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கும் போலீசார்

வந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் சட்டையை போடுவதற்கு எத்தனை அடி திரும்ப சென்றேன் என்றால் திரும்பியவுடன் எதிரி கழுத்தில் வெட்டினார்.

நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி என்னை அரிவாளால் வெட்டவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு பல்வேறு தவறான நடவடிக்கைகள் இருந்தது என்றாலும், அதில் பாதிக்கப்பட்ட நபர் என்னை வெட்டி காயப்படுத்தினார் என்றாலும், மேற்படி விபரத்தை வெளியே சொன்னால் அவமானமாகி விடும் என்று, பின்யோசனையிட்டு எதிரியின் மீது பொய்யாக புகார் மனு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவநாளில் எதிரி ஊரில் இல்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:41:21 +0530